# 43. மண்ணிற்சிறுவீடு

கலிவிருத்தம்

**மண்ணிற் சிறுவீ டதுசெய் மழவோர்**
**எண்ணிற் சிறிதே பெரிதா மிவணீர்**
**பண்ணித் திரிகா ரியமின் படர்வேல்**
**அண்ணற் கடிமைப் படுமா னுடரே.**

*மண்ணில் சிறு வீடு அது செய் மழவோர்*
*எண்ணில் சிறிதே பெரிதாம் இவண்நீர்*
*பண்ணித் திரிகாரியம் மின் படர்வேல்*
*அண்ணற்கு அடிமைப் படுமானுடரே.*

ஒளி வீசும் வேற்படை ஏந்திய பெரியோனான கந்தவேளுக்கு அடிமைப்பட்ட மனிதர்களே! மண்ணினால் சிறுவீடு கட்டி விளையாடும் சிறுவர் செயலையும், உங்கள் செயலையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நீங்கள் இவ்வுலகில் செய்த செயல்கள் சற்றுப் பெரிதாகும், அவ்வளவுதான். 1

**வருநா ளுயிர்போ யிடுநாண் மடவார்**
**இருவாள் விழிநீர் சொரியே தநடை**
**திரிவீர் தழைசால் சிகியே றிவரும்**
**பெரியோன் விபவம் பெறவம் மினரோ.**

*வருநாள் உயிர் போயிடுநாள் மடவார்*
*இருவாள் விழிநீர் சொரி ஏத நடை*
*திரிவீர் தழைசால் சிகி ஏறிவரும்*
*பெரியோன் விபவம் பெற வம்மின் அரோ.*

இனி வரப்போகும் நாள் உயிர் உடம்பை விட்டும் போய்விடும் நாள்; உங்கள் மாதர் தம் இரண்டு ஒளிபொருந்திய கண்களில் நீரைப் பொழியும் குற்றமான செயலில் திரிகின்றவர்களே! தோகைமிக்க மயில் வாகனத்தில் ஏறிவரும் பெரியோன் கந்தவேளின் அன்பைப் பெற வாருங்கள். 2

**உறவே கொடுநீ ருறவென் றிவணெவ்**
**வுறவெய் தியுளீ ருறவொன் றுளதஃ**
**துறவே யுறவோ டுறுவீ ரெனினல்**
**லுறவென் றுணர்வீ ருறவே யுளரே.**

*உறவே கொடுநீர் உறவு என்று இவண் எவ்*
*உறவு எய்தியுளீர் உறவு ஒன்று உளது அஃது*
*உறவே உறவோடு உறுவீர் எனில் நல்*
*உறவு என்று உணர்வீர் உறவே உளரே.*

உறவு உள்ளவர்களே! நீங்கள் இங்கு உறவு கொண்டு உறவு என்று நீங்கள் இங்கு எந்த உறவை அடைந்துள்ளீர்கள்? உண்மை உறவு ஒன்றுள்ளது; அதனைப் பெற உறவுடன் மேற்படின் அதுவே நல்ல உறவு என்று உணர்வீர்கள். 3

**உயர்வீர் தினமெய் யுடையை பணிமேல்**
**உயர்வீர் தினமெய் யுளசேய் பணிமேல்**
**உயர்வீர் தினமெய் யுறவோர் பணிமேல்**
**உயர்வீர் தினமெய் யுடையீ ரொளியே.**

---

**2. தழை** = மயிற்றோகை, பீலி; "கபாலந் தழையே தொங்க லென்றிவை – கலாபிப் பீலியிற் கட்டிய கவிகை" எனுஞ் **சே – திவாகரச் சூத்திரத்தானும்** இப்பொருளறியப்படும்.

**4. ஐபணி** – எனுந்தொடரில் ஐ = சாமி = குரு; **யகரவெதுகை, பிங்கலந்தை** காண்க.

*உயர்வீர் தினம் மெய்யுடை ஐ பணிமேல்*
*உயர்வீர் தினம் மெய்உள சேய் பணிமேல்*
*உயர்வீர் தினம் மெய் உறவோர் பணிமேல்*
*உயர் வீர் தினம் மெய்உடையீர் ஒளியே.*

நாள்தோறும் உண்மையான சாமியின் தொண்டைச் செய்து உயர்வடையுங்கள்; நாள்தோறும் உண்மையுள்ள சேயின் தொண்டைச் செய்து உயர்வடையுங்கள்; நாள்தோறும் உண்மையான உறவுடையாருக்குத் தொண்டு செய்து உயர்வடையுங்கள்; நாள்தோறும் உண்மையுடையவர்களே ஒளிபெற்று உயர்வடையுங்கள். 4

**கல்லா மனதைக் கனியப் பணிமா**
**வல்லோ னெனையாண் மயிலூ ரிறைதாள்**
**எல்லோ ருமிறைஞ் சியெலா நலனும்**
**அல்லோ பெறவென் னகவா தரமே.**

*கல்ஆ மனதைக் கனியப் பணிமா*
*வல்லோன் எனைஆள் மயில் ஊர் இறைதாள்*
*எல்லோரும் இறைஞ்சி எலா நலனும்*
*அல்லோ பெற என் அக ஆதரமே.*

கல் போன்ற கடினமான மனத்தைக் கனியச் செய்து, பெரிய வல்லமையுடையவனான எனை அடிமைகொண்ட மயூரவாகனத்திற் செல்லும் கடவுளின் திருவடிகளை எல்லோரும் வணங்கி, எல்லா நன்மையும் அல்லவா பெறுவதற்கு என் உள்ளன்பு விரும்புகின்றது. 5

**அன்பர்க் கருள்வா ரிதியா யழியா**
**இன்பத் திரளா யிணையில் பொருளாய்**
**என்கர்த் தனெனா வுளசே யடியார்ப்**
**பின்பற் றிடுவோ ரணவார் பிணியே.**

*அன்பர்க்கு அருள்வாரிதியாய் அழியா*
*இன்பத் திரளாய் இணையில் பொருளாய்*
*என்கர்த்தன் என உள சேய் அடியார்ப்*
*பின்பற்றிடுவோர் அணவார் பிணியே.*

தன்னை வணங்கும் அன்பர்களுக்கு அருட்கடலாயும், அழியாத இன்பக் கூட்டமாயும், இணையில்லாத பொருளாயும், என் கடவுள் எனவும் உள்ள சேயின் அடியார்களைப் பின்பற்றுவோர் பிறவி நோயைப் பெறமாட்டார்கள். 6

**எவருந் தெரிவீ ரெமனாள் வருமுன்**
**சிவகந் தமனுச் செபியா தவர்பால்**
**புவனந் தொறுமே பொருநோ வெனுமா**
**கவனம் பெரிதுங் கவியுந் தினமே.**

*எவரும் தெரிவீர் எமன் ஆள் வருமுன்*
*சிவகந்த மனுச் செபியாதவர்பால்*
*புவனம்தொறுமே பொரு நோவு எனும்மா*
*கவனம் பெரிதும் கவியும் தினமே.*

எல்லோரும் தெரிந்து கொள்வீர்களாக! இயமன் தூதன் வருமுன்னே சிவகந்தனுடைய நாம மந்திரத்தைச் செபிக்காதவர்பால், உலகம் தோறும் துன்புதந்திடும் பிறவிநோய் எனும் பெருங்கலக்கம் நாள்தோறும் பெரிதும் வந்து சேரும். 7

**வாய்பே சவொணா மதிவாழ் வதிலே**
**நோய்வா தனைகோ ணுளையே றுவதில்**
**மாய்வா முனரே மகியீர் பெறுமின்**
**சேய்போல் வருமோர் சிவனா லதையே.**

*வாய் பேச ஒணா மதி வாழ்வு அதிலே*
*நோய் வாதனை கோள் நுளை ஏறுவதுஇல்*
*மாய்வு ஆம் முனரே மகியீர் பெறுமின்*
*சேய்போல் வரும் ஓர் சிவனால் அதையே.*

வாய் பேசக்கூடாத மௌன ஞான யோக வாழ்வதிலே, பிறவி நோய் எனும் வாதனையான மாறுபாடு உண்டாவதில்லை; உலகத்தவரே! இறக்கும் முன் அதைக் குழந்தைபோல் வரும் சிவனால் பெறுங்கள். 8

**நினைவொன் றுவதே நிகழ்சே யடியார்**
**வினையென் பதைநீ ருணரீர் வினையீர்**
**தனவின் பமதே சதமென் றதிலே**
**மனமுந் துநரவ் வழிநா டரிதே.**

*நினைவு ஒன்றுவதே நிகழ் சேய் அடியார்*
*வினை என்பதை நீர் உணரீர் வினையீர்*
*தன இன்பம் அதே சதம் என்று அதிலே*
*மனம் முந்துநர் அவ்வழி நாடு அரிதே.*

சேயின் அடியார்களாக உள்ளவர் செயல், அவனிடத்தில் எப்போதும் நினைவு ஒன்றியிருப்பதேயாகும் என்பதை வினை வயப்பட்டவர்களே நீங்கள் அறியமாட்டீர்கள்! செல்வத்தினால் வரும் இன்பமே நிலையானது என்று, அதிலே மனத்தைச் செலுத்துவோர் அந்த வழியை நாடுதல் அரிதாகும். 9

**அறிவின் பெருமா ணறிவீ ருளர்பால்**
**அறியா மையினீ ரறிவீ ரிலர்பால்**
**அறிவாய் நிறைவா னினைமின் களறா**
**அறிவா ரருணைப் புதனா தியையே.**

*அறிவின் பெருமாண் அறிவீர் உளர்பால்*
*அறியாமையில் நீர் அறிவீர் இலர்பால்*
*அறிவாய் நிறைவான் நினைமின்கள் அறா*
*அறிவார் அருணைப் புதன் ஆதியையே.*

நீங்காத அறிவு நிறைந்த அருணகிரிநாதன் என்னும் அறிஞனின் கடவுளை, அறிவின் பெருமாட்சியை அறிவுடையார்களிடம் அறியுங்கள்! மாட்சிமையில்லாத அறியாமையினால் அறிவில்லாதவரிடம் அறிவாய் நிறைகின்றவனை நீங்கள் நினையுங்கள். 10